# *புனித லாரென்ஸ் (-258)*

இவர் பாப்பானவரின் திருத்தொண்டராய் இருந்தார். இவருக்கு சொற்ப வயது என்றாலும் ரோமை திருச்சபைக்கு சேவை செய்து வந்த திருத்தொண்டர்களில் இவரே முதல்வர். திருச்சபையின் சொத்துக்களைப் பாதுகாத்து வரும் வருவாயிலிருந்து ஏழைகளுக்கு வழங்குவது இவரது வேலைகளில் ஒன்றாகும். வேத கலகம் தோன்றியது. பாப்பானவரைப் பிடித்துக் கொலைக்களத்திற்கு கொண்டு போனார்கள். லாரென்ஸ் அழுது கொண்டு பின்சென்றார். பாப்பு, திருச்சபையின் செல்வங்களை ஏழைகளுக்கு வழங்கும்படி அவருக்கு உத்தரவிட்டார். ஏராளமாக வழங்கும்படி லாரென்ஸ் திருபாத்திரங்களையும் விற்றுக் கொடுத்தார்.

அக்காலத்தில் உரோமைத் திருச்சபையானது திருத்தொண்டர்களின் தேவைகளைக் கவனித்ததோடு 1500 ஏழைகளையும் கண்காணித்து வந்தது. அத்தோடு தூர நாடுகளுக்கும் பொருளுதவி செய்தது. உரோமை அதிகாரி ஒருவன் லாரென்சை நோக்கி, திருச்சபையின் திரவியங்களை எல்லாம் எனக்குக் காட்டு என்றான். மூன்று நாட்களுக்குள்ளாக அவ்விதம் செய்வதாக லாரென்ஸ் வாக்களித்தார். பொன்னையும் வெள்ளியையும் அவர் காட்டவில்லை. அதற்குப் பதிலாக திருச்சபையின் திரவியங்களான ஏழைகளைக் காட்டினார். உடனே அதிகாரி கடுங்கோபம் கொண்டு அவரை இரும்பு அடுப்பில் வைத்து எரித்துக் கொல்லும்படி உத்தரவிட்டான். ஈவு இரக்கமுன்றி அவரை உபாதித்தார்கள். தேவ கிருபையால் இவர் வேதனையை வீரத்தோடு சகித்து மகிழ்ச்சியுடன் இருந்தார். உரோமை நகர் மக்கள் மனந்திரும்பவும் கிறிஸ்தவ விசுவாசம் உலகமெங்கும் பரவவும் கடைசி மூச்சி விடும் வரை செபித்து உயிர் துறந்தார். இவரது சாவைக் கண்ட பல அவிசுவாசிகளான அதிகாரிகள் கிறிஸ்தவர்களானார்கள். 258-ஆம் ஆண்டில் இவர் இறந்தார். இவரது உடலை ஆரவாரத்துடன் புதைத்தார்கள்.

**சிந்தனை:**

சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய் ஆதலால் உன்னைப் பெரியவற்றிற்கு அதிகாரிக்குவேன். (மத்தேயு 25:21)

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் அனைத்திலும், நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கும் வரத்தைத் தாரும்.